பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 03 2024 **FRIDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. நீர் ஆதாரங்களை பாதுகாப்பதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. மாநில அமைச்சராக திரு பொன்முடி இன்று பதவியேற்றுக்கொண்டார்.

3. மக்களவைத் தேர்தலுக்கான நான்காவது வேட்பாளர் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

4. அஇஅதிமுக கூட்டணியில் தேமுதிக-விற்கு ஒதுக்கப்பட்ட ஐந்து இடங்களுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

5. உலகக்கோப்பை பாரா வலுதூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

---- இனி விரிவான செய்திகள் ---

<<<<<><>>>>

நீர் ஆதாரங்களை பாதுகாப்பதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது. உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், நம் வாழ்வில் நீர் இன்றியமையா பங்கு வகிப்பதாக குறிப்பிட்டுள்ளார். நீடித்த நீர் மேலாண்மைக்கான திட்டங்களை செயல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<><>>>>

மாநில அமைச்சராக திரு பொன்முடி இன்று பதவியேற்றுக்கொண்டார். ஆளுநர் திரு ஆர் என் ரவி அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார். முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மற்றும் மாநில அமைச்சர்கள் சிலர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக தொடரப்பட்ட வழக்கில், திரு பொன்முடி குற்றவாளி என்று அறிவித்து சென்னை உயர்நீதிமன்றம் தண்டனை வாங்கி தீர்ப்பளித்ததையடுத்து, சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை திரு பொன்முடி இழந்தார்.

இதுதொடர்பான மேல் முறையீட்டு மனுவினை விசாரணை செய்த உச்சநீதிமன்றம், திரு பொன்முடிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைத்ததையடுத்து அவர் மீண்டும் சட்டப்பேரவை உறுப்பினராகும் தகுதி பெற்றார். திரு பொன்முடிக்கு மீண்டும் உயர்கல்வித்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு ராஜகண்ணப்பனுக்கு, கதர் மற்றும் கிராம தொழில்கள் வாரியம் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

<<<<<><>>>>

மக்களவைத் தேர்தலுக்கான பிஜேபி-யின் நான்காவது வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கான வேட்பாளர்கள் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இதன்படி, விருதுநகர் தொகுதியில் திருமதி ராதிகா சரத்குமாரும், நாமக்கல்லில் டாக்டர் கே பி ராமலிங்கமும், மதுரையில் திரு ராம சீனிவாசனும், கரூரில் திரு செந்தில் நாதனும், வடசென்னையில் திரு பால் கனகராஜும், திருவள்ளூரில் திரு பால கணபதியும் போட்டிடுகின்றனர்.

புதுச்சேரியில் திரு நமச்சிவாயம் போட்டியிடுகிறார்.

<<<<<><>>>>

மக்களவைத் தேர்தலுக்கான அஇஅதிமுக கூட்டணியில் தேமுதிக-விற்கு ஒதுக்கப்பட்ட ஐந்து தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, விருதுநகரில் திரு விஜயபிரபாகரனும், மத்திய சென்னையில் திரு பார்த்தசாரதியும், கடலூரில் திரு சிவகொழுந்தும், தஞ்சாவூரில் திரு சிவநேசனும், திருவள்ளூரில் திரு நல்லதம்பியும் போட்டியிடுகின்றனர்.

<<<<<><>>>>

மக்களவைத் தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, தேர்தல் ஆணையம் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகின்றன.

சிவகங்கை மாவட்டத்தில் அனைவரும் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகள் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

இதுதொடர்பாக, கையெழுத்து இயக்கம் ஒன்றையும் நடத்த உள்ளதாக இந்த மாவட்டத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, இந்த தேர்தலில் முதல் முறையாக வாக்களிக்க உள்ளதை தாங்கள் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த மாணவிகள் தெரிவித்தனர்.

<<<<<><>>>>

மக்களவைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை மையத்தை மதுரை மருத்துவக்கல்லூரிக்கு பதிலாக வேறு இடத்திற்கு மாற்றும்படி தற்போது உத்தரவிட இயலாது என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு கங்கா பூர்வாலா, நீதிபதி திரு பரதசக்ரவர்த்தி அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

மதுரை மருத்துவகல்கல்லூரியை வாக்கு எண்ணிக்கைக்கான மையமாக பயன்படுத்துவதால், தேர்தலுக்கு ஒருவாரம் முன்பு தொடங்கி, வாக்கு எண்ணிக்கை முடியும் வரை ஒன்றரை மாதங்கள் மாணவர்கள்

பாதிக்கப்படுவார்கள் என்ற போதிலும் ஏப்ரல் 19-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தற்போது வாக்கு எண்ணிக்கை மையத்தை மாற்றுவது ஆலோசனைக்குரியதாக இருக்காது என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு வழக்கில், தேர்தல் நாளில் ஊதியத்துடன் விடுமுறை பெற வாக்களித்ததற்கான சான்று சமர்ப்பிப்பதை கட்டாயமாக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட முடியாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

<<<<<><>>>>

இந்தியா – பூட்டான் இடையே ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

அரசு முறைப்பயணமாக பூட்டான் சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, அந்நாட்டு பிரதமருடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

எரிசக்தி, விளையாட்டு, மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான இந்த ஒப்பந்தங்கள் இரு தலைவர்களின் முன்னிலையில் கையெழுத்தாயின.

<<<<<><>>>>

பாதுகாப்பு பணிகளில் மட்டுமின்றி, விமானப்படை, பேரிடர் காலங்களிலும் மக்களுக்கு சேவையாற்றி வருவதாக விமானப்படையின் தலைவர் ஏர்சீப் மார்ஷல் வி ஆர் சௌத்ரி கூறியுள்ளார்.

நீலகிரி மாவட்டம் வெலிங்டனில் உள்ள ராணுவ கல்லூரியில் பயிற்சி அதிகாரிகளிடையே இன்று உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

ரஷ்யா – உக்ரைன் இடையேயான மோதலின்போது உக்ரைனில் இருந்த இந்தியர்கள் பாதுகாப்பாக அழைத்துவரப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்கால தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், சவால்களை எதிர்கொள்ளும் வகையிலும் விமானப்படை செயலாற்றி வருவதாக திரு வி ஆர் சௌத்ரி தெரிவித்தார்.

<<<<<><>>>>

அமலாக்கத்துறை பதிவு செய்த வழக்கிலிருந்து விடுவிக்கக்கோரி முன்னாள் அமைச்சர் திரு செந்தில் பாலாஜி தாக்கல் செய்த மனுமீதான தீர்ப்பினை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் வரும் 28-ஆம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

நீதிபதி திருமதி அல்லி இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

இதற்கிடையே, திரு செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் இன்றுடன் முடிவடைவதையொட்டி, புழல் சிறையிலிருந்து காணொலி வாயிலாக அவர் நீதிபதி முன் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து, திரு செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை வரும் 28-ஆம் தேதிவரை நீட்டித்து, நீதிபதி உத்தரவிட்டார்.

<<<<<><>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

தருமபுரி மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையிலான விழிப்புணர்வு வாகன சேவையை ஆட்சியர் திருமதி சாந்தி தொடங்கிவைத்தார்.

---------------------

விருதுநகர் மாவட்டத்தில் வாக்காளர் விழிப்புணர்வு மனித சங்கிலி பேரணி ஆட்சியர் திரு ஜெயசீலன் தலைமையில் இன்று நடைபெற்றது.

----------

நாமக்கல் மாவட்டத்தில் ஆட்சியர் திருமதி உமா தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

--------------

வேலூர் மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி இன்று தொடங்கிவைத்தார்.

---------------

அரியலூர் மாவட்டத்தில் காய்கறிகள் மற்றும் பழங்கள் மூலம் வாக்கு அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வாசகங்களை காட்சிப்படுத்தி, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

------------

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ரயில் நிலையத்தில், 100 சதவீத வாக்குப்பதிவின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் மகளிர் சுயஉதவிக்குழுவினர் உறுதிமொழி மேற்கொண்டதோடு, வண்ண கோலங்களை வரைந்தனர்.

-------------------

திருச்சி மாவட்டத்தில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டுசெல்லப்பட்டதாக பறிமுதல் செய்யப்பட்ட 70 லட்சம் ரூபாயில், உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் 7 லட்சம் ரூபாய் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு பிரதீப்குமார் கூறியுள்ளார்.

<<<<<><>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலகக்கோப்பை பாரா வலுதூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

எகிப்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 49 கிலோ எடைப்பிரிவில் **Parmjeet Kumar**-ம், 65 கிலோ எடைப்பிரிவில் அசோக்கும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 41 கிலோ எடைப்பிரிவில் **Manpreet Kaur** வெண்கலப்பதக்கம் வென்றார்.

----------------

**Beirut** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், இந்தியாவின் மனவ் தாக்கரை வென்று இப்பட்டத்தை கைப்பற்றினார்.

--------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

**<<<<<>END<>>>>**